
# NEWSLETTER

## DIOCESE OF DHARMAPURI

Vol.30 August-2026 No.8



Feast Mass - Cathedral, Dharmapuri



Feast Mass - Thenkaraikottai



Grand Parents Day celebration at DSSS



SC/ST Commision - Scholarship given Programme



Feast Mass - Nellimarathupatti



Blessing of Flag Hoisting Mass - Gollapatti



First Communion and Confirmation - Krishnagiri



Feast Mass - Sogathur



Mass-Hosur Vicariate Pious Association Meeting-Divine Nagar

# BISHOP'S MESSAGE

**August – The Month of the Assumption of the Blessed Virgin Mary**

**Dear Fathers, Religious, Beloved Brothers and Sisters in Christ,**

Grace and peace to you in our Lord Jesus Christ.

The month of August invites us to lift our hearts to heaven as we celebrate the **Solemnity of the Assumption of the Blessed Virgin Mary**. This glorious feast reminds us that the Blessed Virgin Mary, having completed her earthly pilgrimage, was assumed body and soul into heavenly glory. Her Assumption is not only a unique privilege granted to the Mother of God but also a sign of hope and a promise of the glory that awaits all who faithfully follow Christ.

The Word of God assures us:

> **"My soul magnifies the Lord, and my spirit rejoices in God my Saviour."** *(Luke 1:46–47)*

Mary's entire life was a hymn of praise to God. Her humble **"Yes"** transformed the history of salvation. She teaches us that true greatness is found in obedience to God's will, in humility, and in generous service.

**St. Louis de Montfort** beautifully reminds us, *"To Jesus through Mary is the surest, easiest, shortest, and most perfect way."* Likewise, **St. Bernard of Clairvaux** encourages every Christian, *"When the storms of life arise, look to the star; call upon Mary."* These words continue to inspire us in a world marked by uncertainty, anxiety, and division. Mary remains our Mother of Hope, always guiding us safely to her Son.

**Pope Francis** reminds us, *"Mary is the Mother who patiently and tenderly brings us to God, so that He may untie the knots of our soul."* Similarly, **St. John Paul II**, whose episcopal motto was *Totus Tuus* ("Totally Yours"), said, *"In giving ourselves to Mary,*

*we are led completely to Christ.”* Authentic Marian devotion always leads us closer to Jesus. Mary never keeps us for herself; she always points us to her Son.

As a diocesan family, let us imitate Mary's faith, simplicity, and love. May our homes become places of prayer, our parishes centres of communion, and our communities bear witness to charity, reconciliation, and hope. Let us especially pray for our youth, our families, the sick, the elderly, and all who carry the burdens of life.

As we celebrate the Assumption of the Blessed Virgin Mary, we also thank God for the precious gift of **India's Independence**. Let us cherish our freedom by promoting truth, justice, peace, and harmony in our nation. As **Mahatma Gandhi** said, *“Where there is love there is life.”* Let us also remember his inspiring words: *“The best way to find yourself is to lose yourself in the service of others.”* May Our Lady of the Assumption intercede for our beloved India, bless our leaders and all its citizens, and inspire us to be faithful Christians, responsible citizens, and committed disciples of Christ.

During this Marian month, I encourage every family to pray the Rosary daily, participate faithfully in the Holy Eucharist, receive the Sacrament of Reconciliation, and practise works of mercy. Through Mary's loving intercession, may we grow in faith, hope, and charity, and one day share with her the eternal joy of heaven.

May **Our Lady of the Assumption**, Queen of Heaven and Mother of the Church, protect our Diocese, strengthen our faith, renew our hope, and lead us always to her Son.

May Almighty God bless you all abundantly.

✠ **Lawrence Pius, D.D.,**
Bishop of Dharmapuri

# ஆயரின் இறை சிந்தனை

## அன்னை மரியாளின் விண்ணேற்பு - நம்பிக்கையின் ஒளிவிளக்கு

கிறிஸ்து இயேசுவில் அன்பிற்கினிய அருள்தந்தையர்களே, துறவியரே, அன்பான இறைமக்களே,

ஆகஸ்டு மாதம் நம் திருஅவையின் ஆன்மீகப் பயணத்தில் தனிச்சிறப்புடைய மாதமாகும். இம்மாதத்தில் அன்னையின் விண்ணேற்பு பெருவிழாவைக் கொண்டாடுவதன் மூலம் நமது பார்வையை விண்ணகத்தை நோக்கித் திருப்பவும், நமது வாழ்வை இறையாட்சியின் மதிப்பீடுகளுக்கு ஏற்ப புதுப்பிக்கவும் திருஅவை நம்மை அழைக்கிறது.

மரியா, இறைவனின் திருவுளத்தை எந்தச் சூழலிலும் ஏற்றுக்கொண்ட நம்பிக்கையின் பெண். நாசரேத்தின் எளிய இல்லத்திலிருந்து கல்வாரி மலையின் சிலுவை வரை, இறைவனின் திட்டத்தில் உறுதியாக நடந்தவர். அதனால் இறைவன் அவரை விண்ணக மகிமைக்கு உயர்த்தினார். விண்ணேற்பு என்பது மரியாளின் பெருமையை மட்டுமல்ல, இறைவனின் வாக்குறுதிகள் நிறைவேறும் என்பதற்கான உறுதியான சான்றாகும்.

ஆண்டவரால் இயலாதது ஒன்றுமில்லை (லூக் 1:37) என்ற இறைவார்த்தை, மரியாளின் வாழ்வில் முழுமையாக நிறைவேறியது. அந்த வார்த்தை இன்று நம் குடும்பங்களிலும் நம் மறைமாவட்டத்திலும் நம் சமுதாயத்திலும் புதுவாழ்வை உருவாக்கட்டும்.

புனித அகுஸ்தீனார் கூறுகிறார்: மரியா கிறிஸ்துவை தம் இதயத்தில் நம்பிக்கையின் மூலம் ஏற்றுக்கொண்டார். பின்னர் தம் கருவறையில் தாங்கினார். இந்த வார்த்தைகள், வெளிப்புற பக்தியைவிட உள்ளார்ந்த இறைநம்பிக்கையே முக்கியம் என்பதை நினைவூட்டுகின்றன.

புனித மரிய டி மான்ட்போர்ட் கூறுகிறார்: மரியாளின் வழியாக இயேசுவை அடைவதே பாதுகாப்பான வழி. அதேபோல், முன்னாள் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மரியா நம்பிக்கையின் தாய். அவர் நம்மை ஒருபோதும் தனியாக விடுவதில்லை என்று நம்மை ஊக்குவிக்கிறார். மரியன்னை பக்தி, எப்போதும் நம்மை இயேசுவின் அன்பிலும் இரக்கத்திலும் சேவையிலும் வளரச் செய்கிறது.

இன்றைய உலகம் பல சவால்களை எதிர்கொள்கிறது. குடும்பங்களில் ஒற்றுமை குறைகிறது, இளைஞர்கள் பல்வேறு குழப்பங்களில் வாழ்கின்றனர். ஏழைகளும் நோயாளிகளும் நம்பிக்கையைத் தேடுகின்றனர். இத்தகைய சூழலில், அன்னை மரியா நமக்கு நம்பிக்கையின் விளக்காகத் திகழ்கிறார். அவரைப் போல இறைவனை நம்பி, மனிதரை அன்புடன் ஏற்று, பிறருக்காக வாழும் மனப்பான்மையை வளர்த்துக்கொள்வோம்.

ஆகஸ்டு-15 அன்று நாம் இந்தியாவின் சுதந்திர தினத்தையும் கொண்டாடுகிறோம். சுதந்திரம் என்பது ஓர் உரிமை மட்டுமல்ல. அது ஒரு பொறுப்பும் ஆகும். மகாத்மா காந்தி கூறியதுபோல் அன்பு இருக்கும் இடத்தில் வாழ்வு இருக்கிறது. அன்பு, உண்மை, நீதி, சகோதரத்துவம் ஆகிய உயர்வான மதிப்புகளால் நமது நாட்டை வளப்படுத்த ஒவ்வொருவரும் உறுதிபூணுவோம். மதம், மொழி, இனம் என்ற வேறுபாடுகளைத் தாண்டி, அனைவரும் ஒரே குடும்பம் என்ற உணர்வுடன் வாழ்வோம்.

இந்த மரியன்னை மாதத்தில், ஒவ்வொரு குடும்பமும் தினமும் திருச்செபமாலை ஜெபிக்கவும், ஞாயிறு திருப்பலியில் தவறாமல் பங்கேற்கவும், இறைவார்த்தையை தியானிக்கவும் ஏழை-எளியோருக்கு கருணைக்கரம் நீட்டவும் நான் அன்புடன் அழைக்கிறேன். மரியாளின் வாழ்க்கையைப் போல நம் வாழ்க்கையும் இறைவனை மகிமைப்படுத்தும் வாழ்வாக மாறட்டும்.

விண்ணேற்பு அன்னை நமது மறைமாவட்டத்தையும், குடும்பங்களையும் இளைஞர்களையும் குருக்களையும் துறவியரையும், நமது இந்திய திருநாட்டையும் தம் தாய்மையின் பாதுகாப்பில் காத்து, அனைவரையும் தம் மகனாகிய இயேசு கிறிஸ்துவிடம் வழிநடத்துவாராக.

இறைவனின் அருளும் அமைதியும் உங்கள் அனைவர் மேலும் என்றும் நிலைத்திருக்கட்டும்.

அன்புடனும் இறையாசீருடனும்

BISHOP LAWRENCE PIUS D.D. ★ DIOCESE OF DHARMAPURI ★

**லாரன்ஸ் பயஸ்**

தருமபுரி மறைமாவட்ட ஆயர்

# BISHOP'S DESK

**1. Feast of the Assumption of the Blessed Virgin Mary:** August 15th is a Solemnity and a day of Obligation. All the parish priests are reminded to offer Missa Pro Populo on this day as on every Sunday. Let us celebrate on this day the twin feasts of Assumption of Our Lady and the Independence Day of our nation in a meaningful way.

**Please remind the people of the obligation to attend the Holy Mass on this day.**

**2. Feast of St. John Marie Vianney:** The feast of the patron of all parish priests and all priests falls on the 4th of August, giving us an impetus to recharge our vigour for Christ emulating the powerful example of the simple priest of Ars. His undaunted and untiring ministry of the Sacrament of Reconciliation stands witness to his renown. His extraordinary life of prayer & mortification, his heroic dedication to the Word of God are important points of reference for our priestly ministry.

**I wish all priests working in our diocese "A very happy feast of our Patron - Saint John Marie Vianney"**

## BISHOP'S PROGRAMME – AUGUST 2026

| Date & Day | Time | Programme |
|---|---|---|
| August 1st Saturday | 10.30 am | Silver Jubilee of Monsignor Arockia Savariyappan - Cana Retreat Centre, Kandikuppam |
| August 2nd Sunday | 4.15 pm | Mass - Chennai |
| August 4th Tuesday | 11.30 am | Feast of St. John Maria Vianney, Mass- Bishop's House |
| August 8th Saturday | 11.30 am | Golden Jubilee of Fr. Henry George- Valan Nagar |

| | | |
|---|---|---|
| August 9th Sunday | 08.30 am | First Holy Communion & Confirmation -Bagalur |
| | 05.00 pm | Talk on *"Magnifica Humanitas"* - Denkani Kottai |
| August 10th Monday | 10.00 am | Black Day Protest- Pappireddypatti |
| August 12th Wednesday | 11.30 am | Mass - Emmaus Spirituality Center, Villupuram |
| | 06.00 pm | Flag Hosting & Mass - Kadagathur |
| August 13th Thursday | 06.00 pm | Flag Hoisting & Mass- Chengalpet |
| August 14th Friday | 06.00 pm | Feast Mass - Pondicherry Diocese |
| August 15th Saturday | 12 noon | Mass in French- Nellithope |
| August 16th Sunday | 08.00 am | Feast Mass - Arani |
| | 06.00 pm | Flag Hoisting Mass- Kandikuppam |
| August 17th & 18th Mon-Tue | | Classes at St. Peter's Seminary- Bengaluru |
| August 19th Wednesday | 10.00 am | Trust Meeting- Emmaus Sprituality Center Villupuram |
| August 20th Thursday | 11.00 am | Talk CMI Provincial Chapter- Sion Malai |
| August 21st Friday | 09.30 am | Convocation- St. Peter's Seminary- Bengaluru |
| August 22nd Saturday | 03.30 pm | Wedding Mass- Chennai |
| August 23rd Sunday | 06.00 pm | Feast Mass - Chennai |

| | | |
|---|---|---|
| August 24th & 25th Mon- Tue | | Classes at St. Peter's Seminary-Bengaluru |
| August 26th Wednesday | 05.000 pm | Solemn Mass, 250th Anniversary of MEP Mission |
| August 27th Thursday | 03.00 pm | Mass  Retreat - Sogathur |
| August 28th & 29th Fri - Sat | | Classes at St. Peter's Seminary-Bengaluru |

## FEAST OF ST. JOHN MARY VIANNEY

**Dear Fathers,**
Grace and peace of our Lord Jesus Christ be with you all.

On the joyful Feast of **St. John Mary Vianney**, the Patron of Parish Priests, I extend my heartfelt greetings, prayers, and blessings to all our diocesan priests and every priest serving in our Diocese.

The life of the Curé of Ars reminds us that the strength of the priesthood is found not in worldly success but in holiness, prayer, humility, and selfless pastoral charity. His unwavering devotion to the Holy Eucharist, countless hours in the Confessional, and tireless love for God's people remain a shining example for every priest.

As we celebrate his feast, let us renew our commitment to be faithful shepherds after the Heart of Christ. In a world longing for hope, compassion, and truth, may our priestly ministry become a living witness to God's mercy and love.

**"The priesthood is the love of the Heart of Jesus."**

— St. John Mary Vianney

**"The Curé of Ars teaches us that at the heart of the priestly ministry is a profound union with Christ."**

— Pope Benedict XVI

**"A good shepherd has the smell of the sheep."**

— Pope Francis

I sincerely thank each one of you for your generous service, your hidden sacrifices, your fidelity to prayer, and your loving care for the People of God. Your ministry continues to strengthen our diocesan family and bring Christ's presence to countless lives.

May **St. John Mary Vianney** intercede for all of us, obtaining from the Lord renewed zeal, joyful perseverance, good health, and abundant blessings in our priestly ministry.

Let us continue to serve with humility, holiness, and unwavering faith, leading our people ever closer to Christ.

**Happy Feast of St. John Mary Vianney!**

*"I will give you shepherds after my own heart, who will feed you with knowledge and understanding."* **— Jeremiah 3:15**

With my prayerful blessings,

**✠ Lawrence Pius Dorairaj**

Bishop of Dharmapuri

## PROCURATOR DESK

| Newsletter details - August 2026 | |
|---|---|
| **Seminarians Fund** | **Amount** |
| Rev.Fr.A.Susairaj - Binated 10 Mass @ 150 | 1,500.00 |
| Parish Priest - Dharmapuri | 15,350.00 |
| Parish Priest - Krishnagiri | 31,300.00 |
| Rev.Fr.R.Arul Raj - Binated 25 Mass | 3,750.00 |
| Mr.A.S.P.Selvam - Divine Nagar | 1,000.00 |
| **Total** | **52,900.00** |
| | |
| **Cathedral Fund** | **Amount** |
| Parish Priest - Kaniyampadi - Vellore Dicoese | 23,000.00 |
| Rev.Fr.Stanly Stephen - Sultanpettai Diocese **(Tabernacle )** | 500,000.00 |
| Mr.Aloysius & Julie Dharmapuri Parish **(Crucifix)** | 275,000.00 |

| Diocese Development Fund - 2026 | | | | |
|---|---|---|---|---|
| **Parish** | **Apr-26** | **May-26** | **June-26** | **July-26** |
| Adaikalapuram | 800 | 800 | | |
| Averipalli | 500 | 500 | 500 | |
| Bagalur | 800 | 800 | | |
| Bargur (Kottur) | | | | |
| B.Pallipatti | 6,000 | | | |
| Bommidi | 3,000 | | | |
| Billigundu | | | | |
| Christupalayam | 1,000 | 1,000 | | |
| Dasarapalli | 1,500 | 1,500 | | |
| Denkanikottai | 6,000 | 6,000 | 6,000 | 6,000 |
| Dinnur | 200 | 200 | | |
| Divine Nagar | 8,000 | 8,000 | 8,000 | 8,000 |
| Dharmapuri | 10,000 | 10,000 | 10,000 | 10,000 |
| Elathagiri | 8,000 | 8,000 | 8,000 | 8,000 |
| Gobachanthiram | | | | |
| Harur | 1,000 | 1,000 | 1,000 | |
| Hosur | 56,000 | 56,000 | 56,000 | |
| Kadagathur | 500 | 500 | 500 | |
| Kathanpallam | | | | |
| Kaveripattinam | 500 | 500 | 500 | 500 |
| Kandikuppam | | | | |
| Kelamangalam | | | | |
| Kethamapatti | 800 | | | |
| Kempathpalli | 300 | 300 | 300 | |
| Krishnagiri | 25,000 | 25,000 | 25,000 | |
| Kovilur | 6,500 | 6,500 | 6,500 | 6,500 |
| Mathagondapalli | 2,500 | | | |
| Mathigiri | | | 5,000 | |
| Nellimarathupatti | 200 | | | |
| Onnalvadi | 500 | 500 | | |
| Ootamalai | | | | |
| Palacode | 800 | 800 | 800 | 800 |
| Pappiredipatti | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| Pochampalli | | | | |
| Poolapatti | **500** | | | |
| Pushpagiri | | | | |
| Rayakottai | **500** | | | |
| Selliampatti | **6,000** | **6,000** | **6,000** | |
| Sesurajapuram | **4,000** | **4,000** | **4,000** | |
| Shoolagiri | **1,000** | **1,000** | **1,000** | **1,000** |
| Sollepuram | **1,000** | **1,000** | **1,000** | |
| Sipcot, | **30,000** | **30,000** | **30,000** | |
| Sundampatti | **7,500** | **7,500** | **7,500** | |
| Savadiyur | **100** | **100** | **100** | |
| Thandarai | **500** | **500** | | |
| Thenkaraikottai | | | | |
| Uthangarai | **100** | | | |
| Veepampatti | **1,000** | | | |
| Visuvasampatti | | | | |

## SURPLUS MASS INTENTIONS 2026

| Parish | Month | | Month | |
|---|---|---|---|---|
| | May-June 26 | | July-August 26 | |
| | No.of Mass | Amount | No.of Mass | Amount |
| Adaikalapuram | | | | |
| Averipalli | | | | |
| Bagalur | | | | |
| Bargur (Kottur) | | | | |
| B.Pallipatti | 800 | 120,000.00 | | |
| Bommidi | 66 | 9,900.00 | | |
| Biligundu | | | | |
| Christupalayam | | | | |
| Dasarapalli | 98 | 14,700.00 | | |
| Denkanikottai | 45 | 6,750.00 | 41 | 6,150.00 |
| Dinnur/ Gobachandiram | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| Divine Nagar | 50 | 7,500.00 | 50 | 7,500.00 |
| Dharmapuri | 154 | 23,100.00 | 64 | 9,600.00 |
| Elathagiri | 744 | 111,600.00 | 1242 | 186,300.00 |
| Harur | | | | |
| Hosur | 683 | 102,450.00 | 689 | 103,350.00 |
| Kadagathur | | | 40 | 6,000.00 |
| Kathanpallam | | | | |
| Kaveripattinam | | | 25 | 3,750.00 |
| Kandikuppam | 281 | 42,150.00 | 150 | 22,500.00 |
| Kelamangalam | | | | |
| Kethampatti | | | | |
| Kempathpalli | | | | |
| Krishnagiri | | | 433 | 64,950.00 |
| Kovilur | 100 | 15,000.00 | 150 | 22,500.00 |
| Mathagondapalli | | | | |
| Mathigiri | | | | |
| Nellimarathupatti | | | | |
| Onnalvadi | | | 15 | 2,250.00 |
| Ootamalai | | | | |
| Palacode/Savadiur | | | 35 | 5,250.00 |
| Pappiredipatti | | | | |
| Pochampalli | | | | |
| Poolapatti | | | | |
| Pushpagiri | | | | |
| Rayakottai | | | | |
| Selliampatti | 30 | 4,500.00 | 30 | 4,500.00 |
| Sesurajapuram | | | | |
| Shoolagiri | | | | |
| Sollepuram | | | | |
| Sipcot | 300 | 45,000.00 | 200 | 30,000.00 |
| Sundampatti | 100 | 15,000.00 | 77 | 11,550.00 |
| Thandarai | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| Thenkaraikottai | | | 60 | 9,000.00 |
| Uthangarai | | | | |
| Vepampatti | | | | |
| Visuvasampatti | | | | |
| Cana Retreat Centre | 177 | 26,550.00 | | |
| Anbalaya Retreat Centre,Denkanikotai | | | | |
| Lourdes Madha Shrine,Nagamangalam | 3000 | 450,000.00 | | |
| Carmel Retreat Centre, Sogathur | 300 | 45,000.00 | | |

## UNIVERSAL COLLECTIONS –2026

| Parishes | Holy Childhood | Maundy Thursday | Good Friday | Peter Pence |
|---|---|---|---|---|
| | 2/9/2026 | 4/17/2026 | 4/18/2026 | 6/29/2026 |
| Adaikalapuram | **1,000** | **500** | **4,000** | |
| Averipalli | **200** | **500** | **500** | **200** |
| Bagalur | | | **4,800** | |
| Bargur (Kottur) | | | | |
| B.Pallipatti | | **2,500** | **7,000** | |
| Bommidi | **500** | **1,000** | **5,000** | |
| Billigundu | | **765** | **1285** | |
| Christupalayam | **2,000** | **3,500** | **4,500** | |
| Dasarapalli | | **3,500** | **10,000** | |
| Denkanikottai | **1,100** | **2,000** | **6,000** | |
| Dinnur/Gobachanthiram | **500** | **700** | **1,200** | |
| Divine Nagar | **2,000** | **3,000** | **5,000** | |
| Dharmapuri | **6,000** | **5,000** | **15,000** | **5,000** |
| Elathagiri | **12,070** | **8,000** | **15,000** | **6,000** |
| Harur | **1,000** | **1,000** | **2,000** | |
| Hosur | | **13,000** | **28,000** | |
| Kadagathur | | **1,000** | **3,000** | **500** |
| Kathanpallam | | **3,000** | **6,000** | |

| | | | | |
|---|---|---|---|---|
| Kaveripattinam | 500 | 1,000 | 1,800 | 500 |
| Kandikuppam | 5,000 | 5,000 | 48,850 | |
| Kelamangalam | | | 1800 | |
| Kethamapatti | | 1,650 | 5,000 | |
| Kempathpalli | | | | |
| Krishnagiri | 5,000 | 18,000 | 30,000 | 3,000 |
| Kovilur | 3,500 | 4,500 | 8,500 | |
| Mathagondapalli | 1,500 | 2,500 | 12,000 | |
| Mathigiri | | | | |
| Nellimarathupatti | 500 | 2,000 | 2,000 | 1000 |
| Onnalvadi | 500 | 1,000 | 1,500 | 500 |
| Ootamalai | | | | |
| Palacode | 1,000 | 1,800 | 2,500 | |
| Pappiredipatti | | | | |
| Pochampalli | | | | |
| Poolapatti | | 1,500 | 3,500 | |
| Pushpagiri | 300 | | | |
| Rayakottai | 500 | 1,000 | 1,500 | |
| Savadiyur | | | | |
| Selliampatti | 2,500 | 5,000 | 30,000 | 3,000 |
| Sesurajapuram | 2,000 | 3,000 | 7,000 | |
| Shoolagiri | 500 | 500 | 1,500 | 500 |
| Sollepuram | 500 | 1,000 | 1,000 | 500 |
| Sipcot | | 11,000 | 42,000 | |
| Sundampatti | | 2,000 | 8,510 | |
| Thandarai | 200 | 300 | 300 | 200 |
| Thenkaraikottai | 1,000 | 2,000 | 10,250 | 1,000 |
| Uthangarai | | 2,000 | 2,000 | |
| Veepampatti | | 250 | 350 | |
| Visuvasampatti | | 1,000 | 5,000 | |

- Fr. S. Isaias
Financial Administrator

## பொதுநிலையினர் பணிக்குழு

### அறிவிப்பு :

பொதுநிலையினருக்கான கருத்தாளர் சான்றிதழ் தொடர் பயிற்சியானது திருச்சி, பொதுநிலையினர் மையத்தில் நான்கு கட்டங்களாக நடைபெறவுள்ளது. இதில் கலந்துகொள்ள விரும்புகிறவர்கள் அருள்பணி. சின்னப்பன் அவர்களை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு : 90471 72192**

### 2026- கருத்தாளர் சான்றிதழ் பயிற்சிக்கான தலைப்புகள் இந்திய அரசியலமைப்புச் சட்டம் - ஓர் அறிமுகம்

| கட்டம் | எண் | தலைப்புகள் |
|---|---|---|
| ஆகஸ்டு 28-30 | 1 | மக்கள்/நாடு/ஜனநாயகம் அரசியலமைப்பு - ஓர் அறிமுகம் |
| | 2 | குழத் தலைவன்/மன்னராட்சி/ மதத்தின் ஆட்சி/மக்களாட்சி - ஓர் அறிமுகம் |
| | 3 | வேதகால இந்தியா/பிரிட்டிஷ் இந்தியா/சுதந்திரப் போராட்ட இந்தியா - தெரிந்துகொள்வோம் |
| | 4 | இந்திய அரசியலமைப்பு சட்டம் உருவான கோட்பாட்டு பின்னணி |
| செப்டம்பர் 25-27 | 1 | இந்திய அரசியலமைப்பு சட்டம் உருவான வரலாறு |
| | 2 | இந்திய அரசியலமைப்பு முகப்புரையில் உள்ள நோக்கம், விளக்கம் |
| | 3 | இறையாண்மை/சோசலிசம் -ஓர் அறிமுகம் |
| | 4 | சமத்துவம்/சமபங்கு அதன் கோட்பாட்டு விளக்கம் |
| அக்டோபர் 30,31, நவ.1 | 1 | மக்களாட்சி, குடியரசின் பரிணாமங்கள் |
| | 2 | சுதந்திரம்/சமய சார்பின்மை இதன் உள்ளீடுகள் - விளக்கம் |

| | | |
|---|---|---|
| | 3 | சமூக நீதி/அரசியல் நீதி/பொருளாதார நீதி ஓர் விளக்கம் |
| | 4 | பன்மைத்துவம், கூட்டாட்சி (மாநில/ஒன்றிய அரசுகளின் ஒத்திசைவு பட்டியல்) விளக்கம் |
| டிசம்பர் 4-6 | 1 | கேசவானந்த பாரதி (எதிர்) கேரள அரசு விளக்கம் |
| | 2 | இட ஒதுக்கீடு வரலாறு - ஓர் அறிமுகம் |
| | 3 | சுதந்திர இந்தியாவில் இட ஒதுக்கீடு விளக்கம் |
| | 4 | பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்களுக்கு வழங்கப்படும் 10 சதவீத ஒதுக்கீடு (EWS) |
| | 5 | உள் இட ஒதுக்கீடு (SCA)-அறிந்துகொள்வோம் |

**பொதுவான தலைப்புகள்:**

1. திருச்சபை வரலாறு
2. இரண்டாம் வத்திக்கான் சங்கம் - அறிமுகம்
3. பொதுநிலையினரின் அழைப்பும் பணியும்
4. திருஅவையின் பங்கேற்பு அழைப்புகளில் பொதுநிலையினர்
5. திருச்சபை சட்டம்
6. இறைவார்த்தை கிறிஸ்தவ வாழ்வுக்கான வழிகாட்டி
7. தமிழ் இலக்கியத்திற்கு கிறிஸ்தவர்களின் பங்கு
8. ஊடகக் கல்வி
9. பொதுநிலையினரின் சாட்சிய வாழ்வு
10. அன்றாட வாழ்வில் உணவும் ஆரோக்கியமான வாழ்வும்

- அருள்பணி. **சின்னப்பன்**

செயலர், பொதுநிலையினர் பணிக்குழு


தருமபுரி மறைமாவட்டம்
சிறப்பு கருத்தமர்வு
மாண்புமிக்க
மானுடம்
-திருத்தந்தை 14 ஆம் லியோ
(1) தேதி : 26.07.2026 (ஞாயிற்றுக்கிழமை)
• இடம் : தூய பாத்திமா அன்னை திருத்தலம் – கிருஷ்ணகிரி (கிருஷ்ணகிரி மறைவட்டம்)
• நேரம் : மாலை 3.30 மணி முதல் 5:30 மணி வரை.
(2) தேதி : 02.08.2026 (ஞாயிற்றுக்கிழமை)
• இடம் : தூய கார்மேல் அன்னை ஆலயம்– தென்கரைக்கோட்டை, அரூர் மறைவட்டம்
• நேரம் : மாலை 3.30 மணி முதல் 5:30 மணி வரை.
(3) தேதி : 09.08.2026 (ஞாயிற்றுக்கிழமை)
• இடம் : புனித குந்தை தெரசாள் ஆலயம் – தேன்கனிக்கோட்டை, தேன்கனிக்கோட்டை மறைவட்டம்
• நேரம் : மாலை 3.30 மணி முதல் 5:30 மணி வரை.
(4) தேதி : 16.08.2026 (ஞாயிற்றுக்கிழமை)
• இடம் : குழந்தை இயேசு ஆலயம் – செல்லியம்பட்டி, தருமபுரி மறைவட்டம்
• நேரம் : மாலை 3.30 மணி முதல் 5:30 மணி வரை.
(5) தேதி : 23.08.2026 (ஞாயிற்றுக்கிழமை)
• இடம் : புனித ஆரோக்கிய அன்னை ஆலயம் – மத்திகிரி, ஒசூர் மறைவட்டம்
• நேரம் : மாலை 3.30 மணி முதல் 5:30 மணி வரை.

**திருமண தயாரிப்பு வகுப்புகள் 2026-2027**

வகுப்பு நடைபெறும் நாட்கள் : இரண்டு மாதங்களுக்கு ஒருமுறை, மாதத்தின் இரண்டாவது சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் நடைபெறும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 2026 | - | ஜூலை | - | 11, 12 |
| 2026 | - | செப்டம்பர் | - | 12, 13 |
| 2026 | - | நவம்பர் | - | 14, 15 |
| 2027 | - | ஜனவரி | - | 9, 10 |
| 2027 | - | மார்ச் | - | 13, 14 |
| 2027 | - | மே | - | 8, 9 |

நேரம் : காலை 9.30 மணி முதல் மாலை 4 மணி வரை

இடம் : மேய்ப்புப்பணி நிலையம், புதிய பேராலய வளாகம், தருமபுரி

குறிப்பு :

- இரண்டாம் நாள் வகுப்பிற்கு பெற்றோருடன் வரவேண்டும்.
- பதிவு கட்டணம் - ரூ. 1000/-
- பங்குதந்தையின் கடிதம் பெற்று வரவேண்டும்.
- திருமணத்திற்கு தயார்நிலையில் இருப்பவர்கள் மட்டும் வருவது சிறப்புடையதாகும்.
- திருமண ஓலை எழுதுவதற்கு முன்பே திருமண தயாரிப்பு வகுப்பில் பங்குபெற்று சான்றிதழ் பெற்றுக்கொள்ளவும்.

- அருள்பணி. **சின்னப்பன்**
செயலர், பொதுநிலையினர் பணிக்குழு

## தருமபுரி சமூக சேவை சங்கம் - ஏப்ரல் 2026

**1. கோல்பிங் இந்தியா திட்டத்தின்கீழ் சுழல்நிதி வழங்குதல் :**

6.7.2026 திங்கள் கிழமையன்று கோல்பிங் இந்தியா திட்டத்தின்கீழ் செயல்பட்டு வரும்

- அரூர் - லூர்து மாதா கோல்பிங் குழுவிற்கு -ரூ.100000/-
- நெருப்பாண்டகுப்பம் - சென்னம்மாள் கோல்பிங் குழுவிற்கு -ரூ.100000/-
- முருகர்கோவில் நகர் - நேசம் கோல்பிங் குழுவிற்கு -ரூ.100000/-

என மூன்று கோல்பிங் குழுக்களுக்கு மூன்று இலட்ச ரூபாய் சுழல்நிதியானது தருமபுரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் அருள்பணி. சின்னப்பன் அவர்களால் வழங்கப்பட்டது.

**2. பசிப்பிணி ஒழிப்பு ஞாயிறு-2026 ஜுலை மாத நன்கொடை விவரம்:**

ஊத்தங்கரை, புனித அந்தோணியார் ஆலயம் நன்கொடையாக ரூ.1500/- வழங்கியதற்கு தருமபுரி சமூக சேவை சங்கத்தின் சார்பாக நன்றி!

-அருள்பணி. **மரியப்பன்**
இயக்குநர், த.ச.சே.சங்கம்

## தருமபுரி மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழு

**1. அகில உல தாத்தா-பாட்டிகள் தினவிழா:**

தமிழக ஆயர் பேரவையின் நலவாழ்வு பணிக்குழுவின் வழிகாட்டுதலின்படி தருமபுரி மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குவின் சார்பில் அகில உலக தாத்தா-பாட்டிகள் தினவிழா சிறப்பு திருப்பலி, 12.7.2026 ஞாயிற்றுக்கிழமை காலை 11.30 மணியளவில் த.ச.சே.சங்க வளாகத்தில் உள்ள எம்டன் சுதந்திர மண்டபத்தில் தருமபுரி மறைமாவட்ட ஆயர் மேதகு முனைவர் லாரன்ஸ் பயஸ் அவர்களின் தலைமையில், காரித்தாஸ்-இந்தியாவின் முதன்மை இயக்குநர் அருள்பணி. ஜேசுதாஸ், நலவாழ்வு பணிக்குழுவின் செயலர் அருள்பணி மரியப்பன் ஆகியோர் முன்னிலையில் மிக விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இத்திருப்பலியில் சிறப்பு விருந்தினர்களாக அருள்பணியாளர்கள், அருள்சகோதரிகள், நன்கொடையாளர்கள், தன்னார்வ பணியாளர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவியர்கள் கலந்துகொண்டு விழாவினை சிறப்பித்தனர். இவ்விழாவில் மகளிர் சுயஉதவிக்குழுக்கள், கோல்பிங் குழுக்களிலுள்ள விழாவின் நாயகர்களான 100 தாத்தா-பாட்டிகள் கலந்துகொண்டனர். திருப்பலியின் இறுதியில் முதியோர்களுக்கு புடவைகள், வேட்டிகள், துண்டுகள் வழங்கப்பட்டு, மேதகு ஆயர், சிறப்பு விருந்தினர்களால் கௌரவிக்கப்பட்டனர். ஆயர் அவர்கள் விழாவிற்கான எல்லா ஏற்பாடுகளையும் செய்திருந்த பணிக்முவின்

செயலர் அருள்பணி. மரியப்பன் அவர்களுக்கும் பணிக்குழுவின் பொறுப்பாளர்களுக்கும் தனது பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொண்டார்.

**2. "முழு ஆளுமையில் வளர்க்கும் பெற்றோராய்"- விழிப்புணர்வு பயிற்சி:**

தருமபுரி மறைமாவட்ட நலவாழ்வு பணிக்குழுவின் சார்பில் செயலர், அருள்பணி. மரியப்பன் அவர்களின் வழிகாட்டுதலின்படி முழு ஆளுமையில் வளர்க்கும் பெற்றோராய் எனும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் கீழ்காணும் ஒன்றியங்களில் உள்ள கிராமங்களில் நடைபெற்றது.

| ஒன்றியம் | விழிப்புணர்வு பயிற்சி | கலந்து கொண்டோர் |
|---|---|---|
| தருமபுரி | முழு ஆளுமையில் வளர்க்கும் பெற்றோராய்... | 20 |
| பாலக்கோடு | முழு ஆளுமையில் வளர்க்கும் பெற்றோராய்... | 63 |
| பாப்பிரெட்டிப்பட்டி | முழு ஆளுமையில் வளர்க்கும் பெற்றோராய்... | 58 |
| அரூர் | முழு ஆளுமையில் வளர்க்கும் பெற்றோராய்... | 64 |
| ஓசூர் | முழு ஆளுமையில் வளர்க்கும் பெற்றோராய்... | 32 |
| பர்கூர் | முழு ஆளுமையில் வளர்க்கும் பெற்றோராய்... | 66 |
| | மொத்தம் | 303 |

-அருள்பணி. **மரியப்பன்**
செயலர், நலவாழ்வு பணிக்குழு

## தருமபுரி மறைமாவட்ட
## பட்டியலினத்தோர்/பழங்குடியினர் பணிக்குழு

**தலித் மாணவ மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்குதல்**

நாள் : 12.7.2026 இடம் : த.ச.சே.சங்க வளாகம்

சமூக பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ள தலித் கிறிஸ்தவ மாணவ மாணவியர்களின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் நோக்கில் தமிழக பட்டியலினத்தோர்/பழங்குடியினர் பணிக்குழுவின் சார்பில் 13 தலித் கிறிஸ்தவ மாணாக்கர்களுக்கு ரூ. 31,600/- வழங்கப்பட்டது. மேலும் தருமபுரி மறைமாவட்ட ஆயர்

அவர்களின் சார்பில் 14 தலித் கிறிஸ்தவ மாணாக்கர்களுக்கு ரூ.35,000/-ம் வழங்கப்பட்டது.

ஆக மொத்தம் 27 தலித் மாணாக்கர்களுக்கு ரூ. 66,600 கல்வி உதவித் தொகையாக மறைமாவட்ட ஆயர் மேதகு லாரன்ஸ் பயஸ் அவர்களால் வழங்கப்பட்டது.

-அருள்பணி. **மரியப்பன்**

செயலர், பட்டியலினத்தோர்/பழங்குடியினர் பணிக்குழு

## தருமபுரி மறைமாவட்ட புலம்பெயர்ந்தோர் பணிக்குழு

### 1. புலம்பெயர்ந்தோர்/அடைக்கலம்நாடுவோருக்கான சிறப்பு திருப்பலி :

தேன்கனிக்கோட்டை மறைவட்டம், சொல்லேபுரம் SOLA பயிற்சி மையத்தில் 12.7.2026 ஞாயிற்றுக்கிழமையன்று திருப்பலி நிறைவேற்றப்பட்டது. இத்திருப்பலியானது பணிக்குழுவின் செயலர் அவர்களின் வழிகாட்டுதல்படி SOLA Study House சமூகத்தின் இல்ல தலைவர் அருள்பணி. ஏரூஸ் கிஷோர் அவர்கள் தலைமையில் அருள்சகோதரிகள் ஜெசி, சமீரா ஆகியோரின் உதவியுடன் சிறப்பாக நடைபெற்றது. இப்பலியில் 20 புலம்பெயர்ந்தோர் கலந்துகொண்டனர்.

-அருள்பணி. **மரியப்பன்**

இயக்குநர், தருமபுரி சமூக சேவை சங்கம்.

## தமிழ்நாடு ஆயர் பேரவை கூட்டம்-2026

**தமிழ்நாடு கத்தோலிக்க ஆயர் பேரவை மாநில செயலர்கள் மற்றும் மறைமாவட்ட இளைஞர்கள் கூட்டம்**

இடம் : பில்லர் மையம், மதுரை நாள் 05.07.2026

ஒவ்வொரு மறைமாவட்டத்திலிருந்தும் மறைமாவட்ட இயக்குநர் தலைமையில் மறைமாவட்ட மேய்ப்பு பணி பேரவை உறுப்பினர், பொதுநிலையினர் என 9 நபர்கள் கலந்துகொண்டனர். நமது மறைமாவட்டத்திலிருந்து

| | | |
|---|---|---|
| அருள்பணி. ஆரோக்கியசாமி | திரு. யேசுராஜ் | திரு. சூசை |
| திரு. வில்சன் | திரு. மகிமை | திரு. ஆனந்த் |
| திரு. ஆனந்த் | திருமதி. ரோஸ்லீன் ஜீவா | திருமதி.ஜிக்கி |

ஆகியோர் பங்குபெற்றனர்.

காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை நடைபெற்றது. தமிழக ஆயர் பேரவையின் தலைவர் மேதகு. பெ.ஜார்ஜ் அந்தோணிசாமி அவர்கள் தலைமையேற்று, இவ்வாண்டு தமிழக திருஅவை முன்னிறுத்தும் கருத்துகள், அறிவுரைகள் ஆகியவற்றை ஆழமான கருத்துரையாக வழங்கினார். அதாவது ஏழையரை முன்னிறுத்தும் திருஅவை என்ற தலைப்பில் நமது திருஅவையின் இவ்வாண்டு செயல்திட்டத்தை குறித்து சிறப்பான வகையில் பேசினார்.

**அவரது உரையில் வெளிப்பட்ட கருத்துகள் :**

- திருஅவை என்பது வெறும் கட்டிடங்களால் ஆனது அல்ல. மாறாக மனிதர்களைக் கொண்டது.
- ஏழையரை முன்னிறுத்தும் திருஅவை என்ற கருத்தால் சில கேள்விகள் எழும்பக்கூடும்.
  - தலைமைக்கு எதிரான நிலைப்பாடா?
  - திருஅவை செல்வந்தர்களை ஒதுக்குகிறதா?
  - திருஅவை செல்வந்தர்களை நாடி செல்வதில்லையா?

திருஅவை பாகுபாடு பார்ப்பதில்லை. திருஅவை அனைவருக்கும் சமமானது.

வறுமையை திருஅவை உயர்த்தி பார்ப்பதில்லை. வறுமையால் காயப்படுத்தப்பட்டவர்களை உயர்த்திட விரும்புகிறது.

**ஆயர் பேரவையின் அனுமதியுடன் தமிழக-பாண்டிச்சேரி அருள்பணி பேரவை 2026-27ஆம் ஆண்டிற்கான செயல்திட்டம் பின்வருமாறு:**

**நமது இலக்கு:**

ஏழை இயேசுவின் வாரிசுகள் நாம் (திருத்தந்தை லியோ) இறையருளிலும் நிறைவாழ்விலும் வளர (காண். யோவான் 10:10). நம்மைச் செல்வந்தராக்க (காண். 2கொரி 8:9) தம்மையே வெறுமையாக்கிக் கொண்டவரின் (காண். பிலிப் 2:6-11) புதிய உடன்படிக்கையாளர்கள் நாம் ஏழையருக்கு நற்செய்தி அறிவிப்பதோடு, ஏழையரோடு நற்செய்தியாக வாழக் கடமைப் பட்டவர்கள் நாம் (திருத்தந்தை பிரான்சிஸ்)

ஏழையரின் மதிப்பை உயர்த்துவதே நமது அனைத்து அருள்பணிகளின் அழுத்தம். அதன்வழியாக ஒரு சமத்துவ, சமதர்ம, சகோதரத்துவமிக்க புதிய சமுதாயமே நமது இலட்சியம். இறையாட்சியின் இலக்கணமும் அதுவே (காண். லூக் 11:1-4).

**நமது ஏழையர்:**

இன்றைய நம் சூழலமைவில் கீழ்காண்பவர்களை ஏழையரிலும் ஏழையாக தெளிந்து தேர்ந்தோம். தலித்துகள், தலித்திலும் கடைநிலையிலிருப்போர், திருநர், மாற்றுத்திறனாளர், நாடோடிகள், குடி நோயாளர், கைவிடப்பட்ட முதியோர், அனாதையாக்கப்பட்ட குழந்தைகள், பாலினப் பாதிப்பாளர்கள், அந்தந்தத் தளங்களில் அடிப்படை வாழ்வாதாரங்களுக்காக அன்றாடம் போராடுபவர்கள்.

**நமது செயல்திட்டம்:**

ஏழையர் எப்போதுமே உங்களோடு இருக்கின்றார்கள். நீங்கள் விரும்பும்போதெல்லாம் அவர்களுக்கு நன்மை செய்ய முடியும் (மாற்கு 14:7) என்னும் அழைப்பின் அடியொற்றி இக்காலம் காட்டுகின்ற அறிகுறிகளான ஏழையரை முன்னிறுத்தி 2026-2027 ஆண்டில் பின்வருபனவற்றைச் செயல்படுத்த தீர்மானித்தோம்.

1. மறைமாவட்ட, மறைவட்ட, பங்கின் பங்கேற்பு அமைப்புகளில் ஏழையருக்கும் அவர்களின் திட்டங்களுக்கும் முதன்மை தந்து ஏழையருக்கு போதிய பிரதிநிதித்துவமும் உரிய உரிமைகளையும் வழங்குவோம்.

2. மறைமவாட்டம், பங்கு, துறவறச் சபைகள், நிறுவனங்களில் மொத்த வருமானத்தில் குறைந்தது 10 சதவீதத்தை ஏழையரின் கல்வி, மருத்துவம், வீடுகள் போன்ற வாழ்வாதாரங்களுக்கு ஒதுக்கீடு செய்வோம்.

3. படிப்பில் இடைநிற்றல் செய்த மாணாக்கர்கள் கல்வியைத் தொடர்ந்திட உதவிடவும் மேலும் உயர்கல்வி பெற்றிட பங்களவில் பொருளுதவியும், ஓய்வுபெற்ற ஆசிரியர்களால் கல்வி-வேலைவாய்ப்பு தேர்வுகளுக்கு வழிகாட்டுதலும், பங்கு

வழக்குரைஞர்களால் அரசின் திட்டங்களைப் பெற இலவச சட்ட உதவி வழங்கவும் செய்வோம்.

4. தலித் கிறிஸ்தவர்களின் முழுவிடுதலைக்கான தமிழக ஆயர் பேரவையின் பத்து அம்சத் திட்டங்கள், எட்டு அம்சத் திட்டங்கள், இந்திய இலத்தீன் ஆயர் பேரவையின் ஆற்றல்படுத்தம் கொள்கை ஆகிய ஆவணங்களைப் பரவலாக்குவதுடன் தலித் மாணாக்கருக்கு வழங்கப்பட்டுள்ள கொள்கை விதிகளுக்கேற்ப கட்டணச் சலுகையுடனான உரிமைகளை வழங்குவோம்.

5. பசுமை பங்குளாகவும் பரந்த பசுமை இயக்கமாகவும் நம் பங்குகள் வளர்வதற்கான முன்னெடுப்புகளை எடுப்போம்.

- அருள்பணி. **ஆரோக்கியசாமி**
மறைமாவட்ட மேய்ப்பு பணி இயக்குநர்

## மறைமாவட்ட பணிக்குழுக்களின் கூட்டம் -2026

இடம் : அருளருவி மையம், தருமபுரி நாள் : ஜூன் 17

அன்புடையீர்,

மறைமாவட்ட மேய்ப்பு பணி நிலையம் அருளருவி மையத்தில் ஜூன் 17 புதன்கிழமையன்று காலை 11 மணியளவில், பேரருள்திரு. ஆரோக்கிய சவரியப்பன் தலைமையில் பணிக்குழுக்களின் செயலாளர்கள் கூட்டம் நடைபெற்றது. அனைத்து செயலாளர்களும் பங்கேற்று தங்களது கருத்துகளை பகிர்ந்தனர். பங்கேற்ற அனைவருக்கும் நன்றி. அக்கூட்டத்தில் கலந்து ஆலோசித்த கருத்துகள் பின்வருமாறு:

1. தேசிய ஆயர் பேரவையின் மேய்ப்பு பணிக்கான செயல் திட்டங்கள் பகிரப்பட்டு அதன் அடிப்படையில் மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயல் திட்டங்கள் வகுக்கப்படுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

2. மறைமாவட்ட பணிக்குழுக்களின் ஆண்டு செயல் திட்டங்கள் தயாரிக்கப்பட வேண்டும் என்று அழைப்பு விடுக்கப்பட்டது.

3. மறைமாவட்ட செயல் திட்டங்களுக்கான வரைவு நடந்து கொண்டிருப்பதால் தங்களின் பணிக்குழுக்களின் வரைவு செயல்திட்டங்கள் தயாரிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

4. பணிக்குழுக்கள் மறைமாவட்ட அளவில் ஒரு குழுவும், மறைவட்ட அளவில் வட்டார முதன்மை குருவை சந்தித்து ஒரு

குழுவும் செயலரும் பங்கு அளவில் கட்டமைப்புகளை உருவாக்கவும் கேட்டுக்கொள்ளப்பட்டது.

5. பணிக்குழுக்களின் நிதிக்கான ஆலோசனையும் நடைபெற்றது.

6. மறைமாவட்ட பங்களிப்பு பணிக்குழுக்களுக்கு பகிர்வது போதுமானது அல்ல என்பதால் செலவுகளை சந்திக்க சில திட்டங்களை கொண்டுவர முன்வந்தார்கள்.

- மாதந்தோறும் மறைப்பணிக்கு என்று பங்களிக்கும் நல்ல உள்ளங்களை கண்டு சந்தாதாரர்களைப் போல மாதந்தோறும் வரவில் கொண்டுவர ஆலோசனை தரப்பட்டுள்ளது. பங்குத்தந்தை அவர்களை சந்தித்து ஏற்பாடு செய்திட வேண்டும்.
- நன்கொடையாளர்கள், நல்ல உள்ளங்கள், ஆசிரியர்கள், யூபிலி திருமண நாள் அருள்சாதனத்தை சிறப்பிப்போர் மறைப்பணிக்கு என்று கொடுக்க கோரிக்கை வைக்க முன் வந்தார்கள்,
- மறைமாவட்ட பணிக்குழுக்களின் செயலர்கள், மறைமாவட்ட பொருளாளர்கள் கலந்தாலோசித்து நிதி திட்டம் வகுக்க வேண்டும்.
- பணிக்குழுக்களின் சிறப்பு ஞாயிறு கொண்டாட்டங்களில் (இறையழைத்தல் ஞாயிறு, சிறைப்பணி ஞாயிறு, இளைஞர் ஞாயிறு, விவிலிய ஞாயிறு, சமூகத் தொடர்பு சாதனங்கள் ஞாயிறு) திருப்பலியின் சிறப்பு காணிக்கை மறைமாவட்ட மீட்பு பணி இயக்குநர் அல்லது பணிக்குழுக்களின் ஒருங்கியைப்பாளர் அல்லது பணிக்குழுக்களின் செயலாளர்கள் வசூலித்து பொது கணக்கில் வைத்து பணிக்குழுக்களுக்கு செலவிட முடிவு எடுக்கப்பட்டது.

- அருள்பணி. **ஆரோக்கியசாமி**

இயக்குநர், அருளருவி மேய்ப்பு பணி நிலையம்

## Birthday Wishes






Rev.Fr. S.ARUN BENNY -02.8.1944

Rev.Fr. N.S.IRUDAYANATHAN -10.8.1944

Rev.Fr. S.JESUDOSS -11.8.1962

Rev.Fr. CRUZ ARUL RAJ -15.8.1982

## Feastday Wishes




Rev.Fr. DOMINIC RAJA - 8th August

Rev.Fr. VINOTH LOUIS - 25th August

## Ordination Day Wishes




Rev.Fr. A.CYRIL PAULRAJ - 5.8.2020

Rev.Fr. A.JOSEPH ROSARIO - 21.8.1986

## Necrology


Rev.Fr. HUYSMAN - 2.8.1935

Rev.Fr. CHASSAIN - 13.8.1933

Rev.Fr. GRAVIER - 13.8.1977

Rev.Fr. A.SEBASTIAN - 13.8.1999

Rev.Fr. T.C.THOMAS - 23.8.1995


HAPPY FEAST DAY
OF OUR BELOVED
BISHOP LAWRENCE PIUS
AUGUST 10TH
Feast of St. Lawrence
Guided by the Fire of Faith
A Feast Day Tribute to Most Rev. Dr. Lawrence Pius
With a steady staff and watchful eye,
Beneath the vast and holy sky,
You walk the path the Master trod,
To guide the family of God.
With open hands and patient heart,
You choose the better, higher part:
To tend the flock, to heal the weak,
And speak the truth that love must speak.
Like St. Lawrence, bold and true,
The fire of faith burns bright in you.
He served the poor with joyful grace,
And in your care, we see his face.
On August tenth, we raise our voice,
And with our patron saint rejoice.
As our Lordship guides,
Where peace and heavenly love resides.
For Dharmapuri, a beacon bright,
You lead your people in the light.
In humble service, strong and deep,
You guard the souls you vow to keep.
May grace abound, may joy increase,
And lead your steps in lasting peace.